ISSN 1391-9504

விஜய்

Vijey விஜய

28.09.2016 - மலர் 13, இதழ் 31

'கலைக்களஞ்சியம்' உருவான விதம்

போர்த்துக்கேய பாலைவனத்தில் வியப்புக்குரிய உயிரினம்

உலகின் மிக நீளமான மலைத்தொடர்கள்

காலி கோட்டை

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக

★ இதுவொரு (கரடி/ யானை/ காண்டாமிருகம்) ஆகும்.

★ இது (காட்டில்/ தோட்டத்தில்) வசிக்கும்.

★ இதன் விருப்பமான உணவு (கரும்பு/ சோறு/ சீனி) ஆகும்.

★ இதற்கு சுளகு போன்ற (தந்தங்கள்/ கால்கள்/ காதுகள்) உள்ளன.

★ இது (கர்ச்சிக்கும்/ பிளிறும்/ கனைக்கும்).

★ இது மிகவும் (சிறிய/ பெரிய) விலங்கினமாகும்.



* கால்பந்து விளையாடல்
* காலை உணவு உண்ணுதல்
* நித்திரை செய்தல்
* நித்திரை விட்டெழுதல்
* செல்லப்பிராணியுடன் உலா செல்லல்
* பாடம் படித்தல்

காலை
5:00 மணி

மாலை
3:00 மணி

மாலை
4:00 மணி

மாலை
6:00 மணி

காலை
7:00 மணி

இரவு
9:00 மணி



1. இங்கு என்னென்ன பாடப்புத்தகங்கள் உள்ளன?

.....

2. படத்தில் காணப்படும் பழ வகை யாது?

1. தோடை
2. வாழை
3. அப்பிள்

3. மேலே குறிப்பிட்ட பாடங்கள் தவிர, நீங்கள் பாடசாலையில் கற்கும் ஏனைய பாடங்களைக் குறிப்பிடுக.

.....

4. புத்தகங்கள் வாசிப்பது சிறந்ததெனக் கூறப்படுகின்றது. புத்தகங்களை வாசிப்பதனால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

.....

.....

இங்குள்ள காட்சிகள் அமைய வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.

- ஜீரு

Digitized by Noolaham Foundation
noolanam.org | aavanaham.org

கல்வியே சிறந்த செல்வம்

உலகில் சிறந்தது கல்வியா? செல்வமா? என்று எவரேனும் உங்களைக் கேட்டால், அதற்கான பதிலாக எதனைக் கூறுவீர்கள்? சிலர் முதலில் செல்வம் தான் என்று கூறினாலும், உண்மையிலேயே உலகில் சிறந்தது கல்விச் செல்வமே ஆகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அளிக்கக்கூடிய சிறந்த செல்வம் கல்வியாகும். ஒருவர் கல்வி கற்றுத் தேர்ந்த வராக இருந்தால், அவர் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், கல்வியின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதுவே கல்வி எனும் செல்வத்தின் பிரதான பண்பாகும். ஒருவர் கற்ற கல்வியே, அவருக்கு நாட்டிலும் சமூகத்திலும் நன்மதிப்பினை பெற்றுத் தருகின்றது. இதனாலேயே பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது தொடர்பில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிக

முயற்சிகளை எடுக்கின்றார்கள். எனவே, இவற்றை உணர்ந்து மாண வர்களாகிய நீங்கள் கல்வியினை முதன்மையான செல்வமாகக் கருதி கற்றுத் தேர்வது அவசியமாகும்.

களுக்கே உள்ளது. இதனாலேயே கல்வி இருக்கும் இடத்தில் செல்வமும் தங்குவதாக சான்றோர்கள் கூறியுள்ளனர்.

கல்வி கற்கும் காலத்தில்

விஜய் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

இளம் பருவத்திலிருந்தே கல்வியினைக் கற்றுக்கொள்ள மாணவர்கள் முயற்சிக்க வேண்டும்.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்காமல், பிற செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தியவர்கள், பிற்காலத்தில் கல்வியின் சிறப்பு, பெருமை அறிந்து மிகவும் மனவருத்தப்படுவதை நாம் இன்றைய சமூகத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, இந்நிலையை தவிர்க்க வேண்டுமானால், மாணவர்கள் அனைவரும் கல்வியை சிறப்பாகக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

தீய மனப்பான்மை கொண்டவர்களும் வாழ்க்கை பற்றி தூரநோக்கின்றி சிந்திப்பவர்களும் பணத்தினையும் அது சார்ந்த செல்வத்தினையுமே பெரிதாகக் கருதுகின்றனர். உண்மையில், நாம் வாழ்வதற்கு பணம் தேவை என்றாலும், கல்விக்கு முதன்மை அளிக்காமல் பணத்திற்கு மட்டும் முதன்மை அளிப்பது முட்டாள்தனமாகும். ஏனெனில், செல்வத்தினை பாதுகாக்கும் ஆற்றல் கல்வி கற்றவர்

கோனிலிருந்து ஐஸ்கிறீம் வழிவதை தடுக்கும் புதிய கண்டுபிடிப்பு

இளம் வயதிலேயே புதுப்புது கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பலர் உள்ளனர். அந்தவகையில், அமெரிக்காவைச் சேர்ந்த ஒலிவர் மற்றும் சேம் எனும் பெயருடைய இரண்டு நண்பர்கள் ஒன்றினைந்து பத்து வயதில் மேற்கொண்ட கண்டுபிடிப்பிற்கு பரிசு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 'கோன் ஐஸ்கிறீம்' (corn ice cream) சுவைக்கும்போது, அது விரைவில் கரைந்து கை முழுவதிலும் வழிந்தோடுவதுண்டு. இது மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தும். இந்த அசௌகரியத்தைத் தவிர்க்கும் வழிமுறையையே குறித்த சிறுவர்கள் இருவரும் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது, ஐஸ்கிறீம் கோன் தயாரிக்கப்படுகின்ற வேஃபர்ஸ் (wafers) கலவையைக் கொண்டு இவர்கள் வளையமொன்றை வடிவமைத்துள்ளனர். இந்த வளையத்தை கோனின் கீழ்புறமாக உள்நுழைத்து

பத்து வயதில் இரண்டு சிறுவர்களின் சாதனை

அதனை மேல்நோக்கி நகர்த்தினால் போதுமானது. பின்னர் அந்தக் கோனை கையில் பிடித்துக்கொண்டு ஐஸ்கிறீமை சுவைக்கும்போது, ஐஸ்கிறீம் கரைந்தாலும் கையூடாக வழிந்தோடவோ, கீழே சிந்தவோ மாட்டாது. குறித்த வளையமானது, தடுப்புப் போல் இருப்பதாலேயே இந்நிலை தவிர்க்கப்படுகின்றது. பின்னர் கோனுடன் சேர்த்து இந்த வேஃபர்ஸ் வளையத்தையும் உண்ண முடியும்.

இந்த கண்டுபிடிப்பை மேற்கொண்ட சிறுவர்கள் இருவரும் பாலர் வகுப்பில் கல்வி கற்கும் காலத்திலிருந்தே நெருங்கிய நண்பர்களாவர். அப்போதிருந்தே கோன் ஐஸ்கிறீம் சாப்பிடுவதில் இவர்களுக்கு அலாதிப் பிரியமாம்! அதன் பிரதிபலிப்பே, இந்த புதிய கண்டுபிடிப்பாகும். இவர்களுக்கு இப்போது வயது 15. இவர்களது இந்த புதிய கண்டுபிடிப்பை ஊக்குவிக்கும்பொருட்டு அமெரிக்காவில் நடைபெற்ற 'ஷார்க் டேங்க்' எனும் நிகழ்ச்சியொன்றின்போது, இந்த கண்டுபிடிப்பை வணிகப்படுத்துவதற்கான முதலீட்டு உதவியாக 50,000 அ.டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீக்ரட் சீக்ஸ் இரகசிய குழு...

02

அனிதா சிரித்தபடி கதவருகே சென்றாள்.

"டொக் டொக்... டொக் டொக்"

நான்கு முறை கதவு தட்டப்பட்டது. அனிதாவும் அதேபோன்று தட்டினாள்.

"மாம்பழம்" என கடவுச் சொல் கூறப்பட்டது

கதவு திறந்தது. ஹரிஷ் உள்ளே நுழைந்தான். அனிதாவைப் பார்த்த சந்தோஷத்தில் வாலை ஆட்டிக்கொண்டே செல்ல மாகக் குரைத்தது மொன்டி.

"மொன்டி... என் செல்லக் குட்டி..!" என்று அரவணைத் துக் கொண்டாள். கதவு மீண்டும் மூடப்பட்டது.

சிறிது நேரத்தின் பின்னர் பிருந்தாவும் கடவுச்சொல் லைக் கூறி உள்ளே நுழைந் தாள். மூவரையும் பார்த்து சிரித்தாள். ஹரிஷ் பதிலுக் குப் புன்னகைத்தான்.

"ஹாய் மொன்டி...!"

"வவ்" மொன்டி வாலை ஆட்டியபடியே குரைத்தது.

சில நிமிடங்கள் கழிந்தன. அருண் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"இன்றைக்கும் ராகுல் லேட்!"

சொல்லி முடிப்ப தற்குள் கதவு தட்டும் ஒலி கேட் டது. அனிதா பதிலுக்குத் தட்டி னாள். ஆனால், கடவுச்சொல் வரவில்லை.

யார் அது...? கடவுச் சொல் என்ன...?

"sorry... மறந்து போச்சு..."

ஹரிஷ், அனிதா, பிருந்தா மூவரும் அருணைப் பார்த்த னர். அவனுக்கு கோபத்தில் முகம் சிவந்தது.

"போன வாரம் தந்த கடவுச் சொல்லாவது நினைவிருக்கா..?"

"இல்லை"

அருண் கதவை திறக்குமாறு சைகை காட்டினான். கையில் பெரிய பொதியுடன் உள்ளே நுழைந்தான் ராகுல்.

கூட்டம் ஆரம்பமானது

நடுவிலிருந்த மேசையை சுற்றி ஐவரும் கூடினார்கள். மொன்டி கொஞ்ச நேரம் ஒவ்வொருவ ரும் பேசுவதை வேடிக்கை பார்த்தது. பின்பு ஒரு ஓரமாயி ருந்த சாக்கின் மேல் படுத்துக் கொண்டது.

"அனிதா... நீ சொல்ல வேண்டியதை சொல்!"

"ஹம்சத்வேனி மாமி போன வாரம் திருடப்பட்ட பொருட் களை கண்டுபிடிச்சுக் கொடு த்ததற்கு எங்கள் குழுவுக்கு நன்றி சொன்னாங்க. ஒருநாள் வீட்டுக்கு வரச் சொன்னாங்க."

"சரி இந்த வாரம் ஏதாவது புதுக் கேஸ்?" 'இல்லை' என்று தலையாட்டினான் ராகுல். ஆனால் எங்கள் ஊரில் மர்மமான சில விடயங்கள் நடப்பதாகச் செய்தி உள்ளது.

" அதைப் பின்னர் பார்ப்போம்" அப்போது திடீரென்று மொன்டி எழுந் தது. காதுகளை கூர்மையாக்கி அங்கும் இங்கும் பார்த்தது.

"வவ்"

"என்ன மொன்டி...!? பசிக்குதா...?"

அனிதாவின் கேள்வியை கொஞ்சமும் பொருட்படுத்தா மல் ஜன்னல் அருகே சென்று இரு கால்களையும் மேலே வைத்தது. தூரத்தில் நாய்கள் ஒவ்வொன்றாக குரைக்கத் தொடங்கின. மொன்டியும் அவற்றுடன் இணைந்து கொண்டது.

"என்ன மொன்டி... என்னாச்சு...?!"

ஹரிஷ் மொன்டியி னருகே சென்று, ஜன்னல் வழியாகப் பார்த்தான்.

திகைத்துப்போனான்! அவன் பார்த்ததை அவனால் நம்ப முடியவில்லை. சைகையால் மற்றவர்களையும் வரச்சொன் னான். எல்லோரும் ஜன்னல ருகே கூடினர். வானில் மிதந்து கொண்டிருந்த மர்மமான அந்த ஒளிரும் பொருள் நன்றாக ஒளிர்ந்தது. அப்போது ஒளிக் கதிர், ஒரு பிரகாசமான வெளிச் சப்பாதை போன்று மிதந்து வந்த அந்த பொருளையும், ஊரின் கோட்டை மலை உச்சியையும் இணைத்தது.

மர்ம ஒளி பரப்பியது செவ்வாய்க்கிரக மனிதர்களா...? உண்மையை கண்டறிய களம் இறங்கிய குழு...

தொடர்கதை...

"ஏய்... இது என்ன...!?" ராகுல் பீதியுடன் கேட்டான்.

அச்சம் தரும் அமைதி. அந்த வான்பொருள் மட்டும் தொடர்ந்து அப்படியே நின்றது.

"ஏய்... இது? என்னவாயி ருக்கும்...!?" மீண்டும் ராகுல் அச்சத்துடன் கேட்டான்.

"இது ஏதாவது உளவு விமானமாக இருக்குமோ!..."

"இல்லை இது வேற்றுக் கிரகவாசிகளின் வாகனமாக இருக்கலாம்!"

"மிகவும் அருகில் பறப்பதால் செய்மதியாக இருக்க வாய்ப்பில்லை"

ஒவ்வொருவரும் தயங்கியபடியே தமது கருத்துக்களை அச்சத்துடன் வெளியிட்டனர்.

"பிருந்தா, இந்த மர்மமான பொருள்பற்றி நீ என்ன நினைக்கிறாய்...!?"

ராகுல் பதட்டமாகக் கேட்டான். பிருந்தாதான் குழுவின் மூளை. புத்திசாலி; நிறையத் தகவல்களை அறிந்து வைத்திருப்பவள். பிருந்தா தலைமுடியை கோதியவாறு பேசினாள்.

"இது யாரோ அனுப்பிய உளவு விமானம் என்றுதான் நினைக்கிறேன்.

"இல்லை பிருந்தா இது ரொம்ப சின்னதாக இருக்கே... யார் இதை அனுப்பியிருப்பாங்க? எங்கள் ஊரில் அப்படி என்ன மர்மம் இருக்கு...!?"

அனிதா சந்தேகத்துடன் கேட்டாள்.

" உளவு விமானம் என்றால் யாருக்கும் தெரியாமல் மறைந்து அல்லவா வரவேண்டும்...!?"

"அப்படி என்றால் இது என்ன...?" ஹரிஷ் கேட்டான்.

"தெரியவில்லை. ஆனால், நிச்சயம் இது உளவு விமானம் இல்லை"

"சரி முதலில் இங்கிருந்து நாம் வெளியேறுவோம்" அருண் கட்டளையிட்டான்.

(தொடரும்)

ராமுவின் சுட்டித்தனம்

ஓர் ஊரில் ரங்கநாதன் என்ற வியாபாரி வாழ்ந்து வந்தார். அவருடைய செல்ல மகளின் பிறந்த நாளுக்கென பரிசளிக்க வைத்திருந்த கைக்கடிகாரத்தை வீட்டின் பின்புறக் கொட் டகையில் தொலைத்துவிட் டார். அவரால் அதனை பல மணிநேரம் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்போது அங்கே சில சிறு வர்கள் விளையாடிக் கொண் டிருந்தனர். அவர்களிடம், "உங் களில் யாராவது ஒருவர் இந்த கொட்டகையில் விழுந்த என் கடிகாரத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், அவருக்கு பரிசு ஒன்று நான் கொடுப்பேன்" என்றார்.

இதனைக் கேட்ட அனைத்து சிறுவர்களும் உற்சாகத்துடன் கூச்சலிட்டவாறு கொட்டகைக் குள் சென்று தேட ஆரம்பித்த னர். ஆனால், ராமு மட்டும் போன வேகத்தில் திரும்பிவிட்டான். சிறிது நேரத்தில், ஏனைய சிறுவர்களும் கண்டுபிடிக்க முடியவில்லை. என்று வெளியில் வந்துவிட்டனர்.

அதன் பின்னர் ராமு மட்டும் மீண்டும் உள்ளே சென்றான். சிறிது நேரத்தில் கைக்கடிகாரத்து டன் வெளியே வந்தான். அதைப் பார்த்த ரங்கநாதன், "எப்படி

உன்னால் மட்டும் கண்டுபிடிக்க முடிந்தது?" என்று கேட்டார்.

"நான் உள்ளே சென்றதும் தரை யில் அமைதியாக உட்கார்ந்து, காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன். எந்தத் திசை யில் இருந்து 'டிக்டிக்' சத்தம் வருகிறது என்று அறிந்துகொண்ட பின்னர் உங்கள் கடிகாரத்தைக் கண்டு பிடித்தேன்" என்றான்.

இதனைக் கேட்ட ரங்கநாதன் மகிழ்வு டன் ராமுவின் சமயோசித அறிவை பாராட்டி அவனுக்கு பல நிறங்கள் அடங்கிய வண்ணப் பென்சில்களை வழங்கி வழியனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபணு பரிணாமத்தில் நெடுங்கால மாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின்படி,ஆதி மானிட வகையின ராக கருதப்படுவது 'ஒஸ்த்ரோலொப்பிகிகஸ் எஃப்ரிகானஸ்' மானிடனே ஆகும். இம்மானிடனின் மண்டை ஓடு மற்றும் எலும்புத் துண்டுகள் ஆகிய புதைமங்கள் ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட் டுள்ளன. இந்த 'ஒஸ்த்ரோலொப்பிகிகஸ், எஃப்ரிகன்ஸ்' மானிடனில் லுசி என்பவள் முக்கியமான இடத்தினை வகிக்கின்றாள். லுசீயின் மண்டை ஓடு, எலும்புகள் ஆகிய புதைமங்கள் எதியோப்பியா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த லுசீ 3.2 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்துள்ளாள்.

ஆதி மானிட இனமான லுசீயின் மரணம்

மூலம் லுசீ 40 அடி உய ரத்தில் இருந்து கீழே விழுந்ததில், உடல் சிதை வடைந்தே மரணித்துள் ளாள் என நிரூபிக்கப்பட் டுள்ளது. "அவளுடைய மரணம் மிகவும் வேதனை நிறைந்த மரணமாக சம்பவித்திருக்கலாம்" என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

லுசியின் மரணம்

அமெரிக்காவைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுக் குழுவினரே, லுசீயின் எலும்புகளை சீ.டி ஸ்கேன் பரிசோதனைக்கு உட்படுத் தியவர்கள் ஆவர்.அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின்

நுணுக்கமான பரிசோதனை

இந்த சீ.டி.ஸ்கேன் மூலம் 10 நாட்களாகி மேற்கொள் ளப்பட்ட பரிசோதனைமூலம் கிடைத்த தரவுகளை கணினி மயப்படுத்தி லுசீ எவ்வாறு விழுந்திருப்பாள் என நிர்மா ணித்துள்ளனர். இவை அனைத்தையும் லுசீ யின் மொத்த எலும் புகளில் 40 வீதமான எலும்புகளைக் கொண்டே மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானிகள் லுசீ குறித்த ஆய்வுகளை 2008 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகின்றனர்.

'லுசி' எனப் பெயர் வரக் காரணம்

20ஆம் நூற்றாண் டில் மேற்கொள்ளப் பட்ட மிக முக்கிய மான கண்டுபிடிப் பாக, விஞ்ஞானி கள் இதனை

கருதுகின்றனர். லுசீயின் மண்டை ஓடும் எலும்புகளின் பகுதிகளும் 1974 ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக் கப்பட்டது. இக்காலப் பகுதி யில் வானொலியில் ஒலிபரப் பான 'பீட்டில்ஸ்' என்ற பாடல் குழுவினரின் புகழ்பெற்ற பாடல் ஒன்றின் வரியைக் கொண்டே அவளுக்கு 'லுசீ' என பெயர் வைத்தனர்.

மேலும் பல லுசிக்கள்

லுசீ சம்பந்தமாக புதிய தேடல்களில் ஈடுபட்ட பொழுது, லுசீ தனிமையில் வாழவில்லை என்ற விட யத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். இதன்படி லுசீ வாழ்ந்த காலத்தில் மேலும் மாறுபட்ட நான்கு மனித இனங்கள் வாழ்ந்ததாக ஆதா ரங்கள் கிடைத்துள்ளன. இந்த மனித இனங்கள் ஒன்றோடொன்று புரிந்து ணர்வுடன் வாழ்ந்திருக்க லாம் என அனுமானிக்கின் றனர். கடந்த பல தசாப்தங் களாக சேகரிக்கப்பட்ட தொல்பொருள் எச்சங்களை சான்றாகக் கொண்டே லுசீ மற்றும் அதனுடன் தொடர்புகொண்ட மனித இனங்களின் தகவல்கள் பெறப்பட்டதென விஞ்ஞா னிகள் மேலும் தெரிவித் துள்ளமை குறிப்பிடத் தக்கது. (-அ)

கண்டுபிடியுங்கள்

இந்த படத்தில் மறைந்திருப்பவர் இலங்கை மக்கள் சுதந்திரமாக வாழ்வதற் காக தொண்டாற்றிய 'தேச பிதா' ஆவார். இவர் யார்?

(விடை 09 ஆம் பக்கத்தில் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொலன்னறுவை இராசதானியானது, புகழ்பெற்று விளங்கியதோடு, அக்கால மக்கள் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்ததாக வரலாற்று சான்றுகள் கூறுகின்றன. குறிப்பாக, அநுராதபுர யுகத்தோடு ஒப்பிடும்போது, பொலன்னறுவை யுகம் விவசாயத்திலும் சமய எழுச்சியிலும் நீர்ப்பாசனத்துறையிலும் சிறந்து விளங்கியமை உறுதியாகின்றது.



ஆரம்ப காலங்களில் பொலன்னறுவை

விஜயனின் வருகைக்கு முன்னரே, பொலன்னறுவையிலும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் அரக்கர் கோத்திர மக்கள் வாழ்ந்ததாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி, அநுராதபுரத்தில் ஆட்சி செய்த பெரும்பாலான மன்னர்கள் பொலன்னறுவையை முன்னேற்றியதாகவும் அங்கு வாழ்ந்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அத்தோடு, அநுராதபுர இராசதானியின் பாதுகாப்புக்காக எதிரிகளுடன் போர் செய்வதற்காக படைகளை திரட்டும் நடவடிக்கைகள் அக்காலத்தில் பொலன்னறுவையை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. அநுராதபுர யுகத்தில் இதனை ஓர் உப நகரமாகவே மன்னர்கள் ஆட்சி செய்தனர்.

அநுராதபுர இராசதானி பொலன்னறுவைக்கு மாறல்

அநுராதபுர யுகத்தின் இறுதிக் காலப்பகுதியில் ஏற்பட்ட அந்நியர்களின் படையெடுப்பால் மன்னர் ஆட்சி முறை பொலன்னறுவைக்கு மாறியது.

பொலன்னறுவையின் முதல் மன்னன் முதலாம் விஜயபாகு (கி.பி. 1070-1110)

சோழர்கள் பொலன்னறுவையை தலைநகரமாக்கிய பின்னர் 1070 ஆம் ஆண்டு வரை அவர்களின் ஆட்சி நீடித்தது. அதன் பின்னர் முதலாம் விஜயபாகு பொலன்னறுவையைக் கைப்பற்றி முழு இலங்கைக்கும் மன்னனாக முடிசூடிக் கொண்டான். அதன்படி, பொலன்னறுவை யுகத்தின் முதலாம் விஜயபாகுவே முதல் மன்னனாக கருதப்படுகிறான். சோழர்களால் அநுராதபுர அரச பரம்பரைக்குரித்தான இளவரசர்கள் பலர் கொல்லப்பட்டபொழுது விஜயபாகு மன்னன் 'விஜயபாகு கீர்த்தி' என்ற பெயரில் தலைமறைவாக வாழ்ந்தான்.

அதனைத் தொடர்ந்து, முதலாம் விஜயபாகு சோழர்களுடன் போர் புரிந்து அரசாட்சியைப் பெற்றதும் அதிகாரத்தை ஸ்திரப்படுத்தி நாட்டை முன்னேற்றும் பணியில் அயராது உழைத்தான். சோழர்களால் விதிக்கப்பட்டிருந்த அனாவசியமான வரிவிதிப்பிலிருந்து மக்களை விடுவித்தான். இராசரட்டையின் குளங்கள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் பலவற்றை புனருத்தாரணம் செய்து நீர்ப்பாசனத்துறைக்கு விசேட சேவைகள் பல புரிந்தான். தன்னுடைய அரச மாளிகையின் வட திசையில் அட்டதாகே ஒன்றை நிர்மாணித்து தலதா தந்த தாதுவை அங்கு வைத்துப் பேணிப் பாதுகாத்தான். சோழரின் ஆட்சிக் காலத்தில் பர்மாவுக்குச் சென்று அங்கு வாழ்ந்த பௌத்த பிக்குகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்து உப சம்பதா சமய நிகழ்வுகளை நடத்தி வரலாற்றில் நீங்கா இடத்தைப் பெற்றுக்கொண்டான்.

மகா பராக்கிரம பாகு மன்னன் (கி.பி 1153-1186)

வரலாற்றில் குறிப்பிட்டுள்ளதன்படி, இராசரட்டை நாகரிகத்தின் இறுதியான சிறப்புமிக்க பெருமன்னனாக முதலாம் பராக்கிரமபாகு எனும் 'மகா பராக்கிரமபாகு' கருதப்படுகிறான். அவனின் 33 வருட ஆட்சிக்காலத்தில் நாட்டில் பெரும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டான். 163 பெருங்குளங்களையும் 2,376 சிறிய குளங்களையும் 3,910 நீர்ப்பாசன கால்வாய்களையும் 165 அணைக்கட்டுகளையும் கட்டியதாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. தோப்பா வாவி, தும்புட்டுலு வாவி, எரமுது வாவி உள்ளிட்ட ஐந்து வாவிகளை இணைத்தே உன்னத படைப்பான பராக்கிரம சமுத்திரத்தை உருவாக்கினான்.

இலங்கை அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தான். பொத்குல் விகாரை, லங்காதிலக விகாரை, கிரிவெஹெர, பபல்லு வெஹெர, தெமல மகாசாய உள்ளிட்ட பல நிர்மாணங்கள் பராக்கிரமபாகு காலத்தில் உருவாகியவையாகும்.

கீர்த்தி ஸ்ரீ நிஸ்ஸங்கமல்லன் மன்னன் (கி.பி.1187-1196)

நிஸ்ஸங்கமல்லன் 9 வருடமெனும் குறுகிய ஆட்சிக்காலத்தில் பெரும் சேவை புரிந்த மன்னன் ஆவார். மகா பராக்கிரமபாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...றுவை ...ர்கள்

க.பொ.த (சா/த) பாடத்திட்டத்திற்கு உட்பட்டது



ஏற்படுத்திய பொருளாதாரக் கொள்கையை அவ்வாறே பின்பற்றினான். இம் மன்னனின் தகவல் அடங்கிய பல கல்வெட்டுக்களை இலங்கையின் பல பாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கல்வெட்டுக்களில் கல்பொத்து விகாரை கல்வெட்டுத்தான் மிக நீளமானதாகும்.

பொலன்னறுவை மன்னர்கள்

பொலன்னறுவை யுக மன்னர்களின் பட்டியல்:

முதலாம் விஜயபாகு - கி.பி.1070-1110
முதலாம் ஜெயபாகு - கி.பி. 1110-1111
முதலாம் விக்ரமபாகு - கி.பி. 1111-1132
இரண்டாம் கஜபாகு - கி.பி. 1132-1153
முதலாம் பராக்கிரமபாகு (மகா பராக்கிரமபாகு) - கி.பி. 1153-1186
இரண்டாம் விஜயபாகு - கி.பி.1186-1187
நிஸ்ஸங்க மல்லன் - கி.பி. 1187-1196
முதலாம் வீரபாகு - கி.பி.1196 (ஒருநாள் மாத்திரம் ஆட்சி செய்த மன்னன்)
இரண்டாம் விக்கிரமபாகு - கி.பி.1196 (3 மாத ஆட்சியாளன்)
சோடகங்க - கி.பி.1196-1197 (09 மாதம் ஆட்சி செய்தார்)
லீலாவதி அரசி - 1197-1200
சாகசமல்லன் - 1200-1202 (கலிங்க இளவரசன்)
கல்யாணவதி அரசி - கி.பி. 1202-1210
தர்மமாசோகன் - கி.பி. 1210 (ஒரு மாதம் ஆட்சி செய்தான்)
அணிகங்க - கி.பி.1210 (16 நாட்களே ஆண்ட தென் இந்தியர்)
லீலாவதி அரசி கி.பி.1210-1211
லோகேஸ்வரன் - கி.பி. 1211 (9 மாதம் ஆட்சி செய்தான்)
லீலாவதி அரசி - கி.பி. 1211--1212 (9 மாதம் ஆட்சி செய்தார்)
பராக்கிரம பாண்டியன் - கி.பி. 1212-1215 (பாண்டிய வம்ச ஆக்கிரமிப்பாளன்)
கலிங்க மாகன் - கி.பி. 1215-1232 (கலிங்க வம்ச ஆக்கிரமிப்பாளன்)

பொலன்னறுவை இராச்சியத்தின் முக்கியத்துவம்

பொலன்னறுவை யுகத்தில் பௌத்த மதம் மேலும் வளர்ச்சியடைந்தது. இந்த யுகத்தில் சில மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஆசியாவிலேயே 'தேரவாத' பௌத்தத்தின் மத்திய நிலையமாக இலங்கை விளங்கியுள்ளது. அத்தோடு, தமிழ் மன்னர்கள் சிலர் இந்த யுகத்தில் நாட்டை ஆண்டமையால் சைவ சமய, கலை, கலாசார ஆகிய வற்றோடு தமிழ் மொழி வளர்ச்சி அதிகரித்தன. இதற்கு சான்றாக பல சைவக் கோயில்களின் சிதைவுகளை இன்னும் நாம் பொலன்னறுவையில் காண முடியும். ஆளாஹன விகாரை, கல்விகாரை, திவங்க சிலை வீடு, தூபாராம சிலை வீடு, கிரிவெஹர, ரன்கொத்வெஹெர, தெமல மகாசாய, லங்காதிலக சிலை வீடு, ஹெட்டதாகே, வட்டதாகே, அட்டதாகே ஆகிய முக்கிய பௌத்த தலங்களை பொலன்னறுவை யுகத்தில்தான் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரஞ்சித் ஜெயகர்

கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பும் இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியும்

பொலன்னறுவை இராச்சியத்தின் பின்னரைக் காலம் முழுவதும் பலவீனமான ஆட்சியாளர்களின் ஆட்சியே நிலவியது. அத்தகைய பலவீனமான ஆட்சிக்கெதிராக போராடியாக வீழ்ந்த நிகழ்வே கலிங்க மாகனின் படையெடுப்பாகும். இந்நிகழ்வு கி.பி.1215 ஆம் ஆண்டளவில் நடந்தது. அவன் கேரளாவின் பெரும் படைப்பிரிவினருடன் பொலன்னறுவை மீது தாக்குதல் நடத்தினான். மாகனால் பராக்கிரம பாண்டிய மன்னனின் அதிகாரம் பறிக்கப்பட்டது. மிகவும் முன்னேற்றகரமாக இருந்த பொலன்னறுவை நகரை முழுமையாக அழித்தான்.

கலிங்க மாகன் கி.பி.1215 முதல் 1232 வரை மக்களின் கலாசார வாழ்க்கையை அழித்தான். பௌத்த மதத்திற்கு எதிராக கடுமையான கொடுமைகளை புரிந்தான். அவனின் கொடுங்கோலாட்சி பொலன்னறுவை இராச்சியத்தை சீரழித்தது. அதன் விளைவாக அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை எனும் இரு பிரதான நாகரிகங்களும் முடிவுக்கு வந்தன. அதன்பின் நாட்டின் தலைநகர் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

பெயர்: .....

01) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

1. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரு யாது?

| | + ✕ = ...

1. ☒ 2. ⧖ 3. ⋈

2.  அருகில் உள்ள திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?

1.  2.  3. 

3. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவை தெரிக.

1. 2. 3.

4. முதல் உருவிற்கு சமமான உருவை தெரிக.



1. 2. 3.

★ ***என்னிடம் ஒரு தொகை பணம் உள்ளது. கமலிடம் என்னைவிட ரூபா 20 கூடுதலாக உள்ளது. எங்களிருவரிடமும் உள்ள மொத்தப் பணம் ரூபா 320 ஆகும்.***

5. என்னிடம் உள்ள பணத் தொகை யாது?

1. ரூபா 150 2. ரூபா 170 3. ரூபா 300

6. கமலிடம் உள்ள பணத் தொகை யாது?

1. ரூபா 120 2. ரூபா 150 3. ரூபா 170

7. நாதனைவிட ரவியின் நிறை 2 மடங்கு அதிகம். இருவரின் மொத்த நிறை 36kg எனின், நாதனின் நிறை யாது?

1. 24 2. 12 3. 9

8.  இக்கடிகாரம் தினமும் 5 நிமிடங்கள் தாமதமாக நேரத்தைக் காட்டும். இக்கடிகாரம் இன்று 3:00 மணியைக் காட்டினால், நாளை 9:00 மணிக்கு எத்தனை மணியைக் காட்டும்?

1. 8:55 2. 9:00 3. 9:05

9. ....., 37000, ... அருகில் உள்ள இடைவெளிகளில் வர வேண்டிய முந்திய எண், பிந்திய எண் என்பன முறையே;

1. 37100, 37101 2. 36999, 37001
3. 36990, 37001

10. பின்வரும் எண்களில் முதன்மை எண் யாது?

1. 5 2. 6 3. 9

02) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.

1. 999 இற்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் தருக.

....

2. 3210+301+22+0 இதன் எண் குறி யாது?

.....

3. பாத்திரம் A யில் 820ml நீர் உள்ளது. Bயில் Aயைவிட 120ml நீர் குறைவாக உள்ளது எனின், இரு பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவு யாது?

.....

4. அம்மா 5kg சீனி வாங்கி வந்தார். அப்பா 1k 250g சீனி வாங்கி வந்தார் எனின், அப்பாவைவிட அம்மா எவ்வளவு சீனி கூடுதலாக வாங்கி வந்தார்?

.....

5. சுருக்குக $1-\frac{1}{2}$ = ...

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

தமிழ்

(செப்டெம்பர் 21 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01) 1. அதிகாலை 2. பாட்டு 3. சுகமாக
4. அங்குமிங்கும் 5. பட்டுக் கம்பளம்
6. சிறிய காற்று/ இதமான காற்று

02) 1. அக்கம் பக்கம் 2. அருமை பெருமை
3. அல்லும் பகலும் 4. ஊண் உறக்கம்
5. ஓட்டை உடைசல்

03) 1. கதிரை 2. கை 3. நல்லூர்

04) அ) சிறுமி ஆ) பாடினாள் இ) பாடலை
ஈ) அழகிய உ) ரசித்து ஊ) இனிய

05) 1. வியாபாரி 2. பாம்பு 3. சில்லு
4. அதிகாலை 5. புகழ்தல்

06) 1. உறுமும் 2. முக்காரமிடும் 3. குறுகுறுக்கும்

07) 1. பூசணி 2. கிணற்றடி 3. அகப்பை
4. வருகிறேன் 5. ஈர்க்கு

08) 1. முயலுக்கு மூன்று 2. புல்லும் 3. போனாலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய வீரர் விபுலானந்தர்



காரைதீவில் அமைக்கப்பட்டுள்ள விபுலானந்தர் சிலையும் திறப்பு விழா படிகமும்

இலங்கை மணித்திருநாடு அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலகட்டத்தில், இந்து சமயத்தினதும், தமிழ்மொழியினதும் வளர்ச்சி மந்த நிலையில் இருந்து வந்ததோடு, குறிப்பாக தமிழர்களின் கலாசாரமும் செழிப்புக் குன்றியே காணப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் தான் அந்நிய மத, மொழி, கலாசாரத் திணிப்புக்கள் எமது இனத்தைத் தீவிரமாக அணுகிக் கொண்டு வந்தன எனலாம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை மக்களை குறிப்பாகச் சைவத் தமிழ் மக்களை அந்த பயங்கரச் சூழ்நிலையில் இருந்து விடுவித்து, அவர்களின் தனித்துவத்தைக் காப்பாற்றும் பொருட்டு அயராது உழைத்த வர்களில் இருவர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒருவர் வட இலங்கையின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த தவத்திரு ஆறுமுகநாவலர்; மற்றவர் கிழக்கிலங்கையின் கலங்கரை விளக்கமாக விளங்கிய சுவாமி விபுலானந்தர்.

சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையின் காரைதீவில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி பிறந்தவராவார். தமிழ் மொழியில் மாத்திரமின்றி வட மொழியிலும் ஆங்கிலத்திலும் சுவாமி விபுலானந்தர் சிறந்த புலமை பெற்றிருந்தார். சுவாமி விபுலானந்தரின் சிறப்புப் படைப்பு என்று போற்றப்படும் 'யாழ் நூல்' எமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷமாகும்.

தனது தாய்த் திருநாடான இலங்கை மணித்திருநாட்டில் மட்டுமின்றி, தமிழ்நாட்டில் தமிழ்ப்பெருங்குடி மக்கள் மத்தியிலும் கல்விச் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டவர் சுவாமி விபுலானந்தர்.

சுவாமி விபுலானந்தரின் நினைவு முத்திரை

1931 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முத்தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய விபுலானந்த அடிகளார், 1963 இல் இலங்கையின் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை அமைக்கும் முயற்சியில் அடிகளார் அயராது பாடுபட்டார். 1952 இல் திருகோணமலையில் தமது கல்விப் பணியை ஆரம்பித்த விபுலானந்த அடிகளார், அதனைப் படிப்படியாகக் கிழக்கிலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் விரிவடையச் செய்தார். இவ்வாறாக எமது சமய, மொழி, கலை, கலாசாரப் பாரம்பரியங்களின் தனித்துவத்தை நிலைநிறுத்தும் பொருட்டு, கல்வித்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, அயராது உழைத்தவர் சுவாமி விபுலானந்தர்.

இலங்கை மணித்திருநாட்டில் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெரியார்களுள் தெற்கில் ஒரு அநகாரிக தர்மபால போன்று, வடக்கில் ஒரு ஆறுமுகநாவலர் போன்று, கிழக்கில் ஒரு விபுலானந்தர் என்று கூறுவது பொருந்தும். இலங்கை அரசு, சுவாமி விபுலானந்தரையும் தேசிய வீரராக அங்கீகரித்து, அன்னாரை கௌரவிக்கும் முகமாக தபால் முத்திரை வெளியிட்டமை, தமிழ் சமூகம் பெருமைப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

எஸ்.இராஜஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி கோட்டை

இலங்கையின் காலி பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கோட்டையானது, 1588 ஆம் ஆண்டில் போத்துக்கேயரால் கட்டப்பட்டது. கி.பி. 1505 ஆம் ஆண்டளவில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்த போர்த்துக்கேயர் எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கட்டப்பட்ட கோட்டைகளில் இதுவும் ஒன்று எனக் கருதப்படுகின்றது.

17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரால் நவீன மயப்படுத்தப்பட்ட இக்கோட்டை சுமார் 425 வருடங்களுக்கு மேல் பழமையானது. இக்கோட்டையானது, இலங்கைக்குரிய தொல்பொருள் பெறுமதி மிகுந்த ஒரு சொத்து என ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளதோடு, இலங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதான தளமாக இது அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (-அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

இளம் எழுத்தாளர் போட்டி - 2016

ஊடக அனுசரணை: விஜய்

மேல் மாகாண இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். இளம் எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரில் இதுவரை எந்தவோர் ஆக்கத்தையும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. இளம் எழுத்தாளருக்கான நாவல் போட்டி
(20,000 முதல் 25,000 சொற்கள் வரை)
2. இளம் எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி
(750 முதல் 1,000 சொற்கள் வரை)
3. இளம் எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி
(40 முதல் 60 வரையிலான வரிகள்)
4. இளம் எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி
(40-60 வரிகள்)
5. இளம் பாடலாசிரியருக்கான போட்டி
(பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)

விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்த தாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.

06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது.
(மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)

07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.

08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூலப் பிரதியை அனுப்புவதை தவிர்க்கவும். ஏனெனில், தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள் அனுப்பப்பட மாட்டா.

09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016 ஒக்டோபர் 31. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

முகவரி: மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி 2016
கலை, கலாசார அமைச்சு,
4 ஆம் மாடி, ரன்மகுபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண இளம் எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

மேல்மாகாண இளம் எழுத்தாளர்போட்டி - 2016

01. போட்டியின் பெயர்: .....
02. மொழி மூலம்: .....
03. போட்டியாளரின் முழுப் பெயர்: .....
04. புனைபெயர்: .....
05. நிரந்தர முகவரி: .....
06. மாவட்டம்: .....
பிரதேச செயலகப் பிரிவு: .....
07. பிறந்த திகதி: .....
அடையாள அட்டை இலக்கம்: .....
08. 2016.10.31இல் வயது: .....
வருடம்: ..... மாதம்: ..... தினங்கள்: .....
09. பால்: .....
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: .....
.....
தொலைபேசி இலக்கம்: .....
மின்னஞ்சல் முகவரி: .....
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா? .....
13. ஆக்கத்தின் பெயர்: .....
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிசைகளின் எண்ணிக்கை: .....
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? .....
16. உங்களின் சுய ஆக்கமா? .....
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? .....
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: .....
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? .....

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2016 ..... போட்டியாளரின் கையொப்பம்
.....

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைவனத்து வியப்புக்குரி

மனிதன் போன்ற தோற்றம் கொண்ட, ஆனால் நீளமான கால்களையும் கைகளையும் கொண்ட மெல்லிய- பழுப்பு நிறத்திலான உயிரினம் ஒன்று போர்த்துக்கேய பாலைவனத்தில் நடந்து செல்லும் காட்சித் தொடர்கள் அண்மையில் இணையத் தளங்களில் வெளியாகின. இந்த வியப்பூட்டும் உயிரினம் மெல்ல மெல்ல நடந்து மரமொன்றுக்கு அருகில் சென்று மறைந்து விடுகின்றது. கைத்தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட இந்த காட்சிகள் தெளிவற்றிருந்தாலும், நடந்து செல்லும் இந்த உயிரினம் உண்மையில் வியப்பூட்டும் ஒன்றாகவே காணப்படுகின்றது.



வியப்பூட்டும் உயிரினம்

இந்த வியப்பூட்டும் உயிரினத்தினைப் பற்றிய காட்சிகள், இணையத்தளங்களில் பரவும்போது, இத்தகைய உயிரினங்கள் பற்றி நம்பிக்கை கொண்டுள்ள தரப்பினர், இது 'ச்சுப்ப காப்ரா' (Chupacabra) என்று குறிப்பிட்டனர். உலகில் மர்மமான உயிரினங்களாக அடையாளப்படுத்தியுள்ளவற்றில் ச்சுப்பகாப்ராவும் ஒன்றாகும். இது தவிர, லொக்னெஸ் ஏரியின் நெசி, இமயமலையின் யெட்டி மனிதன் மற்றும் அமெரிக்காவின் பிக்ஃபுட் மனிதன் என்பனவும் இந்த பட்டியலில் அடங்குகின்றன. இவையனைத்தும் உண்மையான உயிரினங்களா? அல்லது கற்பனை கதாபாத்திரங்களா? என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

ச்சுப்பகாப்ரா

ச்சுப்பகாப்ரா உயிரினம், லத்தீன் அமெரிக்காவில் வாழ்வதாகவே கூறப்படுகின்றது. தவிர, ஐக்கிய அமெரிக்கா மற்றும் மெக்ஸிகோ போன்ற நாடுகளிலும் இந்த வியப்புக் குரிய உயிரினம் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. ச்சுப்பகாப்ராவின் சருமம் சாம்பல் கலந்த பழுப்பு நிறம் கொண்டது எனக் கருதப்படுகின்றது. அதன் உடலில் செதில்கள் பல உள்ளன என்றும் சில தகவல்களில் தெரிவிக்கப்படுகின்றன. இரண்டு கால்களினால் நடந்துசெல்லக் கூடிய ஆற்றல் கொண்ட இந்த உயிரினத்திற்கு கங்காருகள் போன்று குதித்துச் செல்லக் கூடிய ஆற்றலும் காணப்படுகின்றது. ஒரே நேரத்தில் 20 அடி தூரம் பாய்ந்து செல்லக் கூடிய ஆற்றலையும் கொண்டது என கண்களால் கண்ட சாட்சிகள் கூறுகின்றன. எனினும், இது பற்றி ஆய்வு செய்த பலர், குறித்த உயிரினம் தொடர்பான கதைகள் வெறும் கற்பனைக் கதைகள் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

ச்சுப்பகாப்ராவின் முகம் மனித முகத்தைப் போன்றது என்றும் பெரிய கருமையான கண்களைக் கொண்டது என்றும் கூறப்படுகின்றது. ஒரு சில தகவல்களின்படி, இந்த உயிரினத்திற்கு நாயைப் போன்ற முகமும் இரண்டாகப் பிளந்த நாக்கும் கூர்மையான பற்களும் உள்ளதோடு, அச்சம் கொண்டால் பாம்பைப் போன்று சீறுவதாகவும் கூறப்படுகின்றது.

ச்சுப்பகாப்ரா பற்றிய முதல் தகவல்

அமெரிக்கா மற்றும் மெக்ஸிகோ நாடுகளிலிருந்து இந்த விலங்கு குறித்து தகவல்கள் வெளியாவதற்கு முன்னர், 1990 ஆம் ஆண்டு போர்ட்டோ ரிகோ பிரதேசத்தில் இருந்துதான் ச்சுப்பகாப்ரா குறித்த தகவல்கள் முதன்முதலில் வெளியாகியுள்ளன. அதனை அடுத்தே, அமெரிக்கா முதல் லத்தீன் அமெரிக்காவின் சிலி நாடு வரையான பல்வேறு பகுதிகளில் இந்த உயிரினத்தைப் பார்த்ததாக பல்வேறு தகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன. ச்சுப்பகாப்ராவின் தாக்குதல் குறித்து 1995 ஆம் ஆண்டுதான் போர்ட்டோ ரிகோ பிரதேசத்திலிருந்து முதன் முதலில் தகவல் ஒன்று வெளியானது. இத் தாக்குதலில் 8 செம்மறியாடுகள் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது. இறந்த செம்மறியாடுகளின் நெஞ்சுப் பகுதியிலும் கழுத்திலும் இரத்தம் உறிஞ்சப்பட்டதற்கான கூர்மையான பற்களின் அடையாளங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தக்காட்டேரி அச்சுறுத்தலா?

அவ்வாறே, 1975 ஆம் ஆண்டு மோகா என்ற சிறிய நகரில் மர்ம சம்பவமொன்று நடைபெற்றதாக தெரியவந்தது. இதனை 'மோகா இரத்தக்காட்டேறி அச்சுறுத்தல்' என்று கூறுவர். அந்த தகவலின்படி, ஒரு பண்ணையில் இருந்த

வியப்புக்குரிய உயிரினத்தின் ஒளிப்பதிவுக் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தில் நடமாடிய
ரிய உயிரினம்

சசுப்பகாப்ரா ஆராய்ச்சிகள்

அச்சுறுத்தல்' என்று கூறுகின்றனர்.

ஆனால், 1975 ஆம் ஆண்டு மோகாவில் ச்சுப்பகாப்ரா பற்றிய தக வல்கள் எதுவும் வெளி யாகவில்லை என்ற போதும், சிலர் இது ச்சுப்பகாப்ராவின் செயல்தான் என அன்று சந்தேகம் வெளியிட் டிருந்தனர். எனினும், மோகா சம்பவத்திற்கான காரணங்கள் பின்னர் கண்டறியப்பட்டன.

அதாவது, இது சாத்தான்களை வழிபடும் ஒரு குழுவின் செயல் என்று காலப்போக் கில் கண்டறியப்பட்டது. பலி பூஜைக்காகவே இந்த செயலை அவர்கள் நடத்தி யுள்ளனர்.

பல செம்மறியாடுகள் திடீரென காணாமல் போய்விட்டதாகவும், இறுதியில் இறந்துகிடந்த செம்மறியாடுகளின் உடல்கள் அருகி லுள்ள காட்டில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த செம்மறியாடுகளின் உடலில் ருந்தும் இரத்தம் உறிஞ்சப்பட்டிருந்தது. அத்துடன், உடலில் கூர்மையான பற்களின் அடையாளங்களும் காணப்பட்டன. இதனாலேயே இந்த சம்பவத்தினை 'மோகா இரத்தக்காட்டேறி

பண்ணைக்கு வந்த விலங்கு

2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென் அந்தோனியோ என்ற பண்ணை உரிமையாளரின், பண்ணை விலங்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் ஒரு விலங்கு அங்கேயே கொல்லப்பட்டிருந்தது. ரோமங்கள் அற்ற- நாய் போன்ற தோற்றம் கொண்ட இந்த வியப்பூட்டும் உயிரி னத்தை ச்சுப்பகாப்ரா என்று கூறினர். இதுவே அன்றைய ஊடகங்களிலும் செய்தியாக இருந்தது. எனினும், பின்னர் நடத்தப்பட்ட DNA ஆய்வுகளின்படி, அது ரோமங்களை இழக்கும் நோயினால் பாதிப்ப டைந்த ஒரு நரி என்று கண்டறியப்பட்டது. அதே ஆண்டில் மேலும் இரண்டு நரிகளின் இறந்த உடல்கள் அப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன.

ரஷ்யாவில் ச்சுப்பகாப்ரா

2005ஆம் ஆண்டு முதல் மத்திய ரஷ்யாவின் பண்ணைகளில் வாழும் விலங்குகளைக் கொன்று, அவற்றின் இரத்தத் தினை உறிஞ்சும் உயிரினம் பற்றி ரஷ்ய ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி யிருந்தன. இந்த உயிரினம் பண்ணையில் இருந்த 32 வான்கோழிகளின் இரத்தத்தினை ஒரே நாளில் உறிஞ்சிக் குடித்ததாகவும், மேலும் 30 செம்மறியாடுக ளின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடித்துக் கொன்றுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

1900 ஆம் ஆண்டு முதல் இன்று வரை உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்த வியப்புக்குரிய உயிரினம் குறித்து இவ்வாறான பல தகவல்கள் வெளியாகியுள்ளன. இவற்றில் ஒரு சில தகவல்களை நம்ப முடியாவிடினும், சில தகவல்கள் நம்பத்தகுந்த வையாகவும் உள்ளன.

-பிரியா

REGRESA DEL INFIERNO PARA SEGUIR CON SU CRUEL MISION

'EL CHUPACABRAS' MATA Y HORRORIZA

EBRIA VISITA A SU NOVIO Y AHÍ HACE SU DESFIGURO

HOUSTON, EN MANOS DE DIOS

சசுப்பகாப்ரா சம்பவங்கள், சில...

Quienes han visto al "Chupacabras" dicen que es un ente del averno, un depredador endemoniado, una bestia rabiosa, un monstruo sediento de sangre, un aniquilador cruel y mortífero, un siervo de Satanás que surge entre la negrura de la noche para sembrar muerte y terror en los campos, montes y valles, y como tal parece que está protegido por las fuerzas del mal nadie puede capturarlo, y continúa saciando su sed de sangre y la única huella que deja de su maligna presencia es a sus víctimas: ovejas, caballos o vacas con la piel desgarrada y su carne arrancada a mordidas... y como los campesinos no pueden capturarlo, se santiguan, rezan y se protegen tras las puertas de sus casas con un crucifijo en las manos.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிக நீளமான மலைத்தொடர்கள்

உலகிலுள்ள மிக நீளமான மலைத்தொடர்களில், முதல் நான்கு இடங்களை வகிக்கும் மலைத்தொடர்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

அந்தீஸ் மலைத்தொடர்

உலகின் மிக நீளமான மலைத் தொடர்களில் முதலிடத்தை வகிப்பது, தென் அமெரிக்கா கண்டத்தின் மேற்கு கரையோரமாக அமைந்துள்ள அந்தீஸ் மலைத்தொடர் ஆகும். இது 7,242 கிலோமீற்றர் நீளம் கொண்டது. இம் மலைத்தொடரானது, ஆர்ஜன்டீனா, பொலிவியா, சிலி, கொலம்பியா, ஈக்வடோர், பெரு, வெனிசுவெலா ஆகிய ஏழு தென் அமெரிக்க நாடு களில் பரவி அமைந்துள்ளது.

இமயமலைத்தொடர்

ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள இமயமலைத் தொடரே, உலகின் மிக நீளமான மலைத் தொடர்களில் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. இது 3,862 கிலோமீற்றர் நீளம் கொண்டது. உலகின் மிக உயரமான மலையாக இமயமலையே கருதப்படுகின்றது. இங்குதான் உலகின் அதி உயர் மலைச்சிகரமாகிய 'எவரெஸ்ட்' அமைந்துள்ளது. பூட்டான், திபெத், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், மியன்மார் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் வரை இந்த மலைத்தொடர் பரவியுள்ளது.

றொகீ மலைத்தொடர்

வட அமெரிக்கா கண்டத்தின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள றொகீ மலைத் தொடரே, உலகின் மிக நீளமான மலைத் தொடர்களில் இரண்டாம் இடத்தை வகிக்கின் றது. ஐக்கிய அமெரிக்கா, கெனடா ஆகிய நாடுகளில் பரவியுள்ள இந்த மலைத்தொடர் 6,035 கிலோமீற்றர் நீளம் கொண்டது.

க்ரேட் டிவைடிங் ரேன்ஜ்

அவுஸ்திரேலியா கண்டத்தின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் இருந்து

நியூசவுத்வேல்ஸ் மாநிலம் வரை நீண்டு செல்லும் பெரிய பிரிப்பு மலைத்தொட ரானது (Great Dividing Range), உலகின் நான்காவது நீளமான மலைத்தொடரா கக் கருதப்படுகின்றது. இதன் நீளம் 3,621 கிலோமீற்றர் ஆகும். - வியாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் நடுப்பாகம் வரை மழை இல்லை

இலங்கையின் பொலன்னறுவை, திருகோணமலை மாவட்டங்களில் தற்போது நிலவும் உலர் காலநிலை காரணமாக, அப்பகுதிகளில் வாழும் 4,908 குடும்பங்களை சேர்ந்த 16,201 பேர் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, இந்த மக்களுக்கு நீரை வழங்குவதில் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதுடன், இதனால், அப்பகுதிவாழ் பாடசாலை மாணவர்களும் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

தற்போது நிலவும் காலநிலை பற்றி வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகளின் கருத்தின்படி, ஒக்டோபர் நடுப்பாகம் வரை மழைவீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாதிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சுற்றாடல் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள்

★ முறையற்ற நில நுகர்வு, நிலப் பாதிப்பு (மண் அரிப்பு, பாலைவனமாதல், மண் சரிவு, கடல் அரிப்பு)

★ இயற்கை வளங்கள் சுரண்டல், தவறான அபிவிருத்திப் பணிகள். (விவசாய நிலங்கள், காடுகள் அழிக்கப்படல்)

★ நீர்ப் பற்றாக்குறை.

★ உயிர்ப்பல்வகைமைத் துவ வீழ்ச்சி (இருப் பிடங்களை இழத்தல்)

★ மரபணு மாற்றப்பட்ட உணவுகள், உயிரினங்களின் அறிமுகம்.

★ ஓசோன் படலம் பாதிப்பு.

★ பவளப்பாறைகளின் அகழ்வும் உள்நாட்டில் இடம்பெறும் முறையற்ற நில அகழ்வுகளும்.

★ சுகாதார பாதிப்புகள் (புதிய நோய்கள் பரவுதல், சுத்தமான காற்றின்மை, சிசு மரணம் அதிகரிப்பு)

★ சுற்றாடல் மாசடைவு (காற்று, நீர், நிலம்)



★ காடுகள் குறைதல் (காடழிப்பு)

★ திடீர் காலநிலை மாற்றங்கள்.

★ சுற்றாடல் மற்றும் இயற்கை அழிவுகள்.

★ ஆக்கிரமிப்புத் தாவர இனங்களின் பரவல்.

★ உயிரினங்கள் அழிவடையும் ஆபத்து (வன விலங்குகள், பறவைகள், மீனினங்கள் அழிதல்)

★ ஆபத்தான -மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்த முடியாத தொழில்நுட்பக் கழிவுகள் சேர்தல்.

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள்

★ சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் மற்றும் நீர்வாழ் பறவைகளின் இருப்பிடங்கள் பற்றிய உடன்படிக்கை. (1971)

★ உலக கலாசாரங்கள் மற்றும் தேசிய மரபுகள் பாதுகாப்பு பற்றிய உடன்படிக்கை. (1972)

★ இடம்பெயரும் விலங்குகள் பாதுகாப்பு பற்றிய உடன்படிக்கை. (CMS 1979)

★ கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை.

★ ஓசோன் படலம் பாதுகாப்பு பற்றிய வியன்னா உடன்படிக்கை. (1985)

★ ஓசோன் படல பாதிப்பு பதார்த்தங்கள் பற்றிய மொன்ட்றியல் உடன்படிக்கை. (1987)

★ ஆபத்து மிக்க கழிவுகளை நாட்டு எல்லைகளினூடாக எடுத்துச் செல்லல் மற்றும் அப்புறப்படுத்தலைக் கட்டுப்படுத்தல் பற்றிய Basel உடன்படிக்கை. (1981)

★ உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை. (1992)

★ காலநிலை பாதிப்புகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை. (1992)

★ கடும் வறட்சி, பாலைவனமாதல் (குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில்) மற்றும் பாலைவனமாதலைத் தடுக்கும் ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை. (1994)

★ தாவரங்களைப் பாதுகாக்கும் சர்வதேச உடன்படிக்கை. (1994)

★ எண்ணெய்யினால் ஏற்படும் கடல் மாசடைவினை தடுத்தல் பற்றிய சர்வதேச உடன்படிக்கை.

★ கண்டத் தகடுகள் பற்றிய உடன்படிக்கை.

★ கப்பல்களினால் ஏற்படும் மாசடைவினைத் தடுப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை. (MARPOL- 1973)

★ உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு பற்றிய கார்ட்டிஜீனா உடன்படிக்கை.

★ நீண்ட காலம் நிலவும் காபன் பாதிப்பு பற்றிய ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: පුතා! මොනවද කරන්නේ?
புதா! மொனவத கரன்னே?
அம்மா: மகன்! என்ன செய்கிறீர்கள்?

පුතා: ඇයි අම්මේ?
எய் அம்மே?
மகன்: ஏன் அம்மா?

අම්මා: කඩේට ගිහින් බඩු ටිකක් ගේන්න ඕනේ පුතා.
கடேட்ட கிஹின் படு டிகக் கேன்ன ஓனே புதா.
அம்மா: கடைக்குச் சென்று சாமான்கள் சில வாங்கி வர வேண்டும் மகன்.

පුතා: මොනවද ගන්න ඕනේ අම්මා?
மொனவத கன்ன ஓனே அம்மா?
மகன்: என்ன வாங்க வேண்டும் அம்மா?

අම්මා: හාල්, සීනි, පිටි, පරිප්පු ගන්න ඕනේ පුතා.
ஹால், சீனி, பிட்டி, பரிப்பு கன்ன ஓனே புதா.
அம்மா: அரிசி, சீனி, மா, பருப்பு வாங்க வேண்டும் மகன்.

පුතා: දැන්මම යන්න ඕනේ ද අම්මේ?
தென்மம யன்ன ஓனே த அம்மே?
மகன்: இப்பவே போக வேண்டுமா அம்மா?

අම්මා: දැන් වැඩක් නම් තව ටිකකින් යන්න.
தென் வெடக் நம் தவ டிககின் யன்ன.
அம்மா: இப்போது வேலையென்றால் சற்று நேரத்தில் போங்கள்.

පුතා: මම පොඩි වැඩක්. තව ටිකකින් යන්නම් අම්මේ.
மம பொடி வெடக். தவ டிககின் யன்னம் அம்மே.
மகன்: எனக்கு கொஞ்சம் வேலை. சற்று நேரத்தில் போகிறேன் அம்மா.

சிறிது நேரம் கழித்து...

පුතා: අම්මේ! ගන්න ඕනේ බඩු ටික ලියලා දෙන්න.
அம்மே! கன்ன ஓனே படு டிக லியலா தென்ன.
மகன்: அம்மா! வாங்க வேண்டிய சாமான்களை எழுதித் தாருங்கள்.

අම්මා: මම ලියලා තියෙන්නේ පුතා. මෙන්න සල්ලි.
மம லியலா தியென்னே புதா. மென்ன சல்லி.
அம்மா: நான் எழுதி இருக்கிறேன் மகன். இதோ பணம்.

පුතා: හොඳයි අම්මේ.
මම ගිහිල්ලා එන්නම්.
ஹொந்தய் அம்மே.
மம கிஹில்லா என்னம்.
மகன்: நல்லது அம்மா. நான் போய் வருகிறேன்.

பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக.

1. ..... ටිකක් ගේන්න ඕනේ.
2. හාල්, ... පරිප්පු.
3. තව ටිකකින් .....

தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
Direct speech & Indirect speech

was மற்றும் were முதலான துணை வினைச்சொற்களைத் தனித்தனியாகக் கையாண்டு அமைக்கப்படுகின்ற இறந்தகால தனி வாக்கியங்களை தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் போது, அவ்வாக்கியங்களும் இறந்தகால வினைமுற்று வாக்கியங்களாக அமைய வேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.

அ) Manju said, "I was at home yesterday night."
மஞ்சு கூறினாள், "நான் நேற்றிரவு வீட்டில் இருந்தேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) Manju said that she had been at home the previous night.
தான் நேற்றிரவு வீட்டில் இருந்ததாக மஞ்சு கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

குறிப்பு: மேற்படி (அ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'was' எனும் இறந்தகால வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'had been' என இறந்தகால வினைமுற்றாக மாற்றப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இ) Nimal said, "I was in hospital yesterday."
நிமல் கூறினான், "நான் நேற்று ஆஸ்பத்திரியில் இருந்தேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Nimal said that he had been in hospital the previous day.
தான் நேற்று ஆஸ்பத்திரியில் இருந்ததாக நிமல் கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

உ) The teachers said, "we were in Kandy last week."
ஆசிரியர்கள் கூறினர், "நாங்கள் கடந்த வாரம் கண்டியில் இருந்தோம்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) The teachers said that they had been in Kandy the previous week.
தாங்கள் கடந்த வாரம் கண்டியில் இருந்ததாக ஆசிரியர்கள் கூறினர்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

குறிப்பு: மேற்காணும் (உ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'were' எனும் இறந்தகால வினைச்சொல், பிறர் கூற்று (ஊ) வாக்கியத்தில் 'had been' என இறந்தகால வினைமுற்றாக (past perfect) மாற்றியமைக்கப்பட்டுள்ளதை கவனத்தில்கொள்க.

★ மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்

எ) The traders said, "we were at the market yesterday."
வியாபாரிகள் கூறினர், "நாங்கள் நேற்று சந்தையில் இருந்தோம்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஏ) The traders said that they had been in the market the previous day.
தாங்கள் நேற்று சந்தையில் இருந்ததாக வியாபாரிகள் கூறினர்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★——★——★——★

ஐ) The farmers said, "we were in the garden yesterday."
விவசாயிகள் கூறினர், "நாங்கள் நேற்று தோட்டத்தில் இருந்தோம்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஒ) The farmers said that they had been in the garden yesterday.
தாங்கள் நேற்று தோட்டத்தில் இருந்ததாக விவசாயிகள் கூறினர்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட் விருது விழா ஒத்திவைப்பு

செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற விருந்த கிரிக்கெட் விருது விழா நொவெம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. இதற்கமைய, மேற்படி விருது வழங்கும் விழா நொவெம்பர் 30 ஆம் திகதியன்று கொழும்பு 'ஷோட் டர்ஸ் எட்ஜ்' ஹோட்டலில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மட்டத்தில் கிரிக்கெட் வீரர்கள் வெளிப்படுத்திய திறமையின் அடிப்படையில் விருதுக்குரியவர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளதுடன், இம்முறை இதற்கென புதிய நடைமுறைகள் சில கையாளப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டுக்கள்

தீப்பந்தத்தை எரியூட்டவுள்ள முன்னாள் தமிழ் போட்டியாளர்கள்

இலங்கையின் 42 ஆவது தேசிய மெய்வல்லுனர் போட்டிகள் செப்டெம்பர் 29 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நடைபெறவுள்ளதை அறிவீர்கள். இம்முறை தேசிய மெய்வல்லுனர் போட்டிகள் முதல் தடவை யாகவே யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றமையால் இதனை கௌரவிக்கு முகமாக மெய்வல்லுனர் போட்டி ஆரம்பத்தை யொட்டிய தீப்பந்தத்தை ஏற்றுவதற்கென யாழ்ப்பா ணத்தையே பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் வீரர் ஒருவருக்கும், முன்னாள் வீராங்கனை ஒருவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள் ளமை சிறப்பம்சமாக கருதப்படுகின்றது.

இதன்படி, முன்னாள் இலங்கையின் தேசிய கூடைப்பந்தாட்ட தலைவி யும் தற்போதைய தேசிய கூடைப்பந்தாட்ட தெரிவுக் குழு உறுப்பினராகவும், கூடைப்பந்தாட்ட பயிற்று னராகவும் பணியாற்றுகின்ற ஜயந்தி சோமசேகரம் இதில் ஒருவராவார். மற்றையவர் 70 ஆம் ஆண்டு களில் இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் விளையாடிய அன்தனி பிள்ளை ஆவார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மேற்படி தேசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள், இறுதி நிகழ்வு இரண்டிலும் ஜனாதிபதி, பிரதமர், விளையாட்டுத்துறை அமைச்சர், வட மாகாண முதலமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூரண சுதந்திரமே பங்களாதேஷ் அணியை பலப்படுத்தியுள்ளது

டிலான் சமரவீர

''பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினருக்கு முழுமை யான சுதந்திரம் அளிக்கப் பட்டுள்ளமையானது, அவர்களால் ஏனைய பிரபல அணிகளை வெற்றிகொள்ள முடியும் என்ற மனோபலத்தை ஏற்படுத்தியுள்ளது.'' இவ்வாறு புதிதாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும், பங்களாதேஷ் அணிக்கான துடுப்பாட்ட பயிற்றுனரா கவும் நியமனம் பெற்றுள்ள டிலான் சமரவீர தெரிவித்துள் ளார்.

தனது புதிய பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட பின் பங்களாதேஷ் அணி குறித்து மேலும் குறிப்பிட்ட டிலான் சமரவீர, தான் முதல்நாளில் பங்களாதேஷ் அணியினரை நன்றாக இனங்கண்டதாகவும் சிறந்த வீரர்கள் அணியில் இருப்பதை உணர முடிந்ததாகவும் குறிப்பிட் டுள்ளார்.

சிமென்ஸ் நீக்கம்...!

மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் பதவி யிலிருந்து பில் சிமென்ஸ் நீக்கப்பட்டுள்ளார். அணியில் இவர் மேற்கொண்ட சில நடத்தை மாற்றங்கள், அவர் ஏற்படுத்திய இதர மாற்றங்கள் குறித்து அதிருப்தி ஏற்பட்ட மையின் காரணமாகவே, பயிற்றுனர் பதவியிலிருந்து சிமென்ஸ் நீக்கப்பட்டிருப்ப தாக தெரிவிக்கப்படுகின்றது.

மே.இ.தீவுகள் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுவே, இம்முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பராலிம்பிக்கில் சைக்கிளோட்ட வீரரொருவர் மரணம்

இம்முறை பராலிம்பிக் போட்டிகளின்போது, சைக்கிள் ஓட்டவீரர் ஒருவர் மரணமடைந்த செய்தி விளையாட்டு உலகை கவலை கொள்ளச் செய்துள்ளது. ஆடவர்க்கான C4-C5 எனப்படும் சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொண்ட ஈரான் வீரரான கொல்கனேசாட் என்பவரே, இவ்வாறு மரணம டைந்தவராவார். குறித்த சைக்கிள் ஓட்டப் போட்டி யின்போது, இடைவழியில் இவர் கீழே சரிந்து விழுந்துள்ளார். இதில் அவருக்கு இருதயக் கோளாறும் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவமனையில் இவரை அனுமதித்தபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார்.

48 வயதாகின்ற கொல்கனேசாட் 2012 பராலிம்பிக் போட்டியிலும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

noolaham.org | aavanaham.org

மனிதாபிமான பாதையில் சாரணர்கள்

"இயற்கையை பாதுகாக்கும் செயலணியின் பங்காளராக நான் இன்று என்னை உறுதிப்படுத்துகின்றேன். நான் எனது குடும்பத்தாருக்கு, நண்பர்களுக்கு மட்டுமன்றி தாயகத்தில் உள்ள அனைத்து தாவரங்களையும் நான் நேசிக்கின்றேன். அதனால் அவற்றைப் பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளேன். நான் இயற்கைப் பாதுகாவலன் என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் எனது வாழ்நாள் முழுவதனையும் இதற்காக அர்ப்பணிப்பதற்கு திடசங்கற்பம் கொள்கின்றேன்".

மேற்கூறப்பட்ட உறுதி மொழியுடன் ஆரம்பமான மனிதாபிமான சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்து லட்சம் மரங்களை நடும் அங்குரார்ப்பண நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபெறவென 2015 உலக அழகு ராணிப் போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்ற அமெரிக்க அழகிகள் பிரிட்னி பெயான் மற்றும் அன்ஜலியா ஒன்க் ஆகியோர் வருகை தந்திருந்தனர். இந்த நிகழ்வு அண்மையில் தெஹிவளை நெதிமால் விகாரையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீநாத் குணரத்ன, பிராந்திய குழு உறுப்பினர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்ணான்டோ மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கொழும்பில் உள்ள பல பிரதான பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

பத்து லட்சம் மரங்கள் நடும் அங்குரார்ப்பண நிகழ்வு...

பொல்கொல்லவில் நடைபெற்ற கண்டி கம்போரி

கண்டி மாவட்ட சாரணர் சங்கத்தின் கம்போரி முகாம் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை கண்டி பொல்கொல்ல மகாவலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. 'நவீன உலகத்தினை இளைஞர்களுக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்துதல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த கம்போரியில் சுமார் ஐந்தாயிரம் சாரணர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய் சாரணர் உலகம்

பிராந்திய நாடுகளின் சாரணர் இலச்சினை

இலங்கை சாரணர் உறுப்பினர்களாகிய நீங்கள் உங்களுக்குரிய சாரணர் பிராந்தியம் பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். எனவே, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் காணப்படும் அனைத்து சாரணர் இலச்சினைகளையும் இங்கு காண முடியும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை உட்பட 29 நாடுகளைச் சேர்ந்த சாரணர் இலச்சினை கொண்ட இந்த பகுதியினை வெட்டி 'லொக்' புத்தகத்தில் ஒட்டிக்கொள்ளுங்கள்.

கவனிக்க:- சிவப்பு பின்னணியில் உள்ள இலச்சினை அனைத்து ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 'பிராந்திய சாரணர்' இலச்சினையாகும். பிராந்திய சாரணர் இலச்சினையினை அணியும் உத்தியோகபூர்வ அதிகாரம் பிராந்திய தலைவர்களுக்கே உண்டு. இதன்படி பிராந்திய இலச்சினையை அணிந்து கொள்ளும் ஒரே ஒரு இலங்கை சாரணர் பேராசிரியராக சட்டத்தரணி ஜனபிரித் பெர்ணான்டோ திகழ்கின்றார்.

அவுஸ்திரேலிய சாரணர் சங்கம் | பங்களாதேஷ் சாரணர் சங்கம் | பூட்டான் சாரணர் சங்கம் | புரூணை சாரணர் சங்கம் | கம்போடியா சாரணர் சங்கம் | மொங்கோலியா சாரணர் சங்கம் | நேபாள சாரணர் சங்கம் | நியுசிலாந்து சாரணர் சங்கம் | பாகிஸ்தான் சாரணர் சங்கம் | பப்புவாநியுகினியா சாரணர் சங்கம்

சீன சாரணர் சங்கம் | பிஜி சாரணர் சங்கம் | ஹொங்கொங் சாரணர் சங்கம் | இந்திய சாரணர் சங்கம் | இந்தோனேஷியா சாரணர் சங்கம் | பிலிப்பைன்ஸ் சாரணர் சங்கம் | சிங்கப்பூர் சாரணர் சங்கம் | இலங்கை சாரணர் சங்கம் | தாய்லாந்து சாரணர் சங்கம் | மெக்காவ் சாரணர் சங்கம்

ஜப்பான் சாரணர் சங்கம் | கிரிபட்டி சாரணர் சங்கம் | கொரியா சாரணர் சங்கம் | மலேசியா சாரணர் சங்கம் | மாலைதீவு சாரணர் சங்கம் | பொலினிசியா சாரணர் சங்கம் | வியட்நாம் சாரணர் சங்கம் | மியன்மார் சாரணர் சங்கம் | திமோர் சாரணர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி: 207



மேலிருந்து கீழ்

01. காடு.
02. மேடையில் பேசுபவன்.
03. வெயில், மழையின்போது உதவுவது (தலைகீழ்)
04. சரி-எதிர்ப்பதம். (தலைகீழ்)
06. தேம்பி அழுகை. (குழம்பியுள்ளது)
07. பழங்களின் தொகுப்பு இவ்வாறு அழைக்கப்படும். (தலைகீழ்)
08. உடை.
09. மீதி. (குழம்பியுள்ளது)
10. பயம். (தலைகீழ்)

இடமிருந்து வலம்

01. இடைவிடாமல் பெய்யும் மழை.
03. ஈ, நுளம்பு போன்றவற்றின் வளர்ச்சிப் பருவங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
05. தெரு. (மாறியுள்ளது)
06. இதனை ஏற்றத் திரி தேவை. (குழம்பியுள்ளது)
08. தொடக்கம். (மாறியுள்ளது)
10. தீங்கிழைக்கும் பூச்சி இவ்வாறு அழைக்கப்படும்.
11. மலை.

குறுக்கெழுத்துப் போட்டி: 206 விடைகள்

1சு	மி	த்	2தி	ரை	
ப			ட	3கு	ள்
4வே	5த	ந்	ள்		கு
ளை	ரு	6உ		தி	7ச
		து			ஞ்
8சூ	ரை	ரு		டு	9வ

வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களை யேனும் அமையுங்கள்

A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக



உருக்களின் எண்ணிக்கையில் வட்டமிடுக



இடைவெளிகளை நிரப்புக





அறிவுக்கு விருந்து (14.09.2016) விடைகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேதுராம் - துலாணி தம்பதியரின் செல்வப் புதல்வி கனிஷ்கா, தனது இரண்டாவது பிறந்தநாளை 16.09.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

முஹாசபா மீடியா நெட்வேர்க்கினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கான அல் குர்ஆன் கிராத் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அதன் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான ஜுனைட். எம்.பஹ்த்தின் தலைமையில், காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளன அஷ்ஷஹீத் அஹமது லெப்பை ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கியதோடு, 'உலக அரங்கில் நீங்கள் யார்?' எனும் இறுவட்டினை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

எஸ்.நாமித் அஹமட்,
கமு/அல்-மனார் ம.கல்., மருதமுனை.

ச.ஜித்மினி,
புஷ்பதான பெ.கல்., கண்டி.



கே.நவனீகா,
மமா/ஹவ/கங்கேவத்தை தமிழ் வித்தியாலயம்
மஸ்கெலியா.

மகளுக்கு...

அனுப்ப வேண்டிய முகவரி:
சிறுவர்மலர்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு

ச.சாந்த சொரூபன்,
து/ஹோல்புறூக் விஞ்.கல்.,
அக்கரைப்பத்தனை.

கி.கௌசல்யா,
க.தலாத்து ஓயா த.ம.வித்.,
மொரகொல்ல.

ஜே.சானினி,
முருங்கன் ம.வித்., மன்னார்.

★ புவியில் இருந்து நிலவைப் பார்க்கும்போது, அது மிக அழகாகத் தெரியும். அவ்வாறே, நிலவில் இருந்து புவியைப் பார்க்கும்போது, புவியும் நீல நிறத்தில் மிக அழகாகத் தெரியும். இங்கு நீல நிறத்தில் தெரிவது எமது புவியில் உள்ள கடலாகும்.

★ புவியில் இருந்து நிலவை நோக்கி 95km வேகத்தில் பயணித்தால், நிலவை அடைவதற்கு ஆறு மாதங்கள் எடுக்கும்.

★ 1969 இல் நிலவை நோக்கிப் பயணித்த 'அப்பலோ' விண்கலத்தின் தொடர்பாடல் சாதனத்தைவிட, தற்போது நாம் பயன்படுத்தும் கையடக்கதொலைபேசிகளின் தொழில்நுட்பம் பல மடங்கு அதிகமாகும்.

★ ஒவ்வொரு வருடமும் நிலவானது, புவியிலிருந்து 3.72 செ.மீற்றர் அதாவது 1.48 அங்குலம் விலகிச் சென்றபடியே இருக்கின்றதாம்.

★ 1 மாதத்தில் இரண்டு பௌர்ணமிகள் வந்தால் அவற்றை புளூமூன் (நீல நிலவு) என அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை வளர்க்கும் கலைக்களஞ்சியம்

மனிதன் அறிய நினைக்கும் பொருள் பற்றியோ, இடம் பற்றியோ பெருந்தகவல்களை கலைக்களஞ்சியம் மூலமாக அறிந்துகொள்ள முடியும். இவ்வாறான கலைக்களஞ்சியத்தின் சுவராஸ்யமான தக வல்களை இன்று ஆராய்வோம்.

சீன மொழியில் 18 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த கலைக்களஞ்சியம் 5020 தொகுதிகளைக் கொண் டது. இது லண்டனிலுள்ள அரும்பொருட்காட்சிய கத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

'அனைத்துப் பொருட்கள் பற்றிய விபரங்கள் கொண்ட நூல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்'
- கிரேக்க தத்துவஞானி அரிஸ் டோட்டில்

1541 ஆம் ஆண்டளவில் 'என்சைக்ளோபீடியா' என்ற சொல்லை 'ரிங்கல்பர் ஜியெஸ்' எனும் ஜேர்மனியர் முதன்முதலாகப் பயன்படுத்தினார். ஜோன் ஹாரிஸ் எனும் கிறிஸ்தவ குருவானவர் ஒருவரே ஆங்கில மொழியில் கலைக்களஞ்சியத்தை மற்றும் அதன் பொருட்களை அகர வரிசைப்படுத்தி முதலில் வெளியிட்டார். 1749 ஆம் ஆண்டில் 'சேம்பர்ஸ்' என்பவர் இத்தாலிய மொழியில் முதல் கலைக்களஞ்சியம் ஒன்றை வெளியிட்டார்.

1732 ஆம் ஆண்டு முதல் 1750 ஆம் ஆண்டு வரை 18 ஆண்டு களாக ஜேர்மனியைச் சேர்ந்த ஜெட்லர் என்பவ ரின் அயராத முயற்சியால் 64 தொகுதிகளாக கலைக் களஞ்சியத்தை வெளியிட் டார். அதை இன்றும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கலைக்களஞ்சியங் களுள் 'என்சைக்ளோபீடியா பிரிட்டனிகா' எனும் கலைக் களஞ்சிய தொகுப்பே மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றது. இது 1768 ஆண்டில் தொகுக்க ஆரம்பிக்கப்பட் டது. ஆரம்பத்தில்

உருவான விதம்



இது 100 சிறு தொகுப்பு களாகவும் பின்பு 25 தொகுதி களாகவும் வெளிவந்தது. ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்களில் சுமார் 4000 அறிஞர்களின் 65,000 கட்டு ரைகள் உள்ளடங்கியுள்ளன. இதில் பொருட்கள் பற்றிய விளக்கங்களுக்கென சுமார் 20,000 படங்களுக்கு மேல் பிரசுரிக்கப்பட்டு, தற்போது மக்களின் பாவனைக்குட்பட்டுள்ளது.

(- அ)

வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD

★ 4000 English Letter Writing Software

★ 8 GB Pen Drive

புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

14.09.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
சேர். வைத்தியலிங்கம் துரைசாமி

Pendrive வெற்றியாளர்:
இ.சர்மினி,
255, எல்லை வீதி,
செங்கலடி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(28.09.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
28.09.2016
விடை: .....
பெயர்: .....
முகவரி: .....
தெ.பே.இல: .....
பாடசாலை: .....
தரம்: .....
.....
கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தீயணைப்பு கருவியொன்றை உருவாக்குவோம்!

இன்று நாம் தீயணைப்பு கருவியினை உருவாக்குவோம். இதன்மூலம் தீயணைப்பு கருவியின் செயற்பாட்டினை நீங்கள் அறியலாம்.

தேவைப்படுபவை:

- ★ சோடியம் பைகாபனேற்
- ★ வினாகிரி அரைக் கோப்பை
- ★ கண்ணாடிக் குவளை
- ★ மெழுகுதிரிகள் சில

இவ்வாறு செய்வோம்!

1. மெழுகுதிரிகளை வரிசையாக வைத்து ஒளியேற்றுங்கள்.
2. சோடியம் பைகாபனேற்றினை கண்ணாடிக் குவளையில் இடுங்கள்.
3. அதில் வினாகிரி சேர்த்து கலக்கி விடுங்கள்.
4. குவளையை சற்று சரித்து அதன் வாய்ப் பகுதியினை மெழுகுதிரியின் பக்கம் கொண்டு வாருங்கள். (இதன் போது கலவை மெழுகுதிரியின் மீது விழக்கூடாது. இதனை பெரியோர்களின் உதவியுடன் மேற்கொள்ளவும்.)
5. இதோ, நீங்கள் மெழுகுதிரி வரிசையின் மீது குவளையினை கொண்டு செல்லும் போது மெழுகுதிரிகள் அணைவதனை உங்களால் காண முடியும்.

விஞ்ஞான விந்தைகள்

கவனிக்க:

குடிக்கும் நீர் மற்றும் பானங்கள் அருந்தும் பாத்திரங்களை இந்த பரிசோதனைக்கு பயன்படுத்த வேண்டாம். உங்கள் பரிசோதனை நிறைவடைந்த பின்பு நீங்கள் பயன்படுத்திய பாத்திரங்கள் மற்றும் கைகளை நன்கு கழுவி சுத்தம் செய்ய மறவாதீர்கள். பெரியோர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.

நடைபெறுவது என்ன?

நீங்கள் உருவாக்கிய தீயணைப்புக் கருவியே இதற்கு காரணம்.

வினாகிரியும் சோடியம் பைகாபனேற் ஒன்றுடன் ஒன்று எதிர்விளைவு காட்டும் போது, 'காபனீரொக்சைட்' உருவாகின்றது. காபனீரொக்சைட் காற்றினை விட எடை அதிகமானது. ஆதலால் இந்த கலவை கலக்கும் போது உருவாகும் காபனீரொக்சைட் வாயு குவளையில் தங்கியிருக்கும். எனினும் குவளையினை சரிக்கும் போது அதில் உள்ள காபனீரொக்சைட் வெளியே வருகின்றது.

மெழுகுதிரி ஒளிர்வதற்கு ஒட்சிசன் தேவை. இதன் போது, மெழுகுதிரி மீது குவளையில் உள்ள காபனீரொக்சைட் வெளியில் வந்து ஒட்சிசனின் இடத்தை நிரப்புகின்றது. இதனால், ஒட்சிசன் இன்றி மெழுகுதிரி எரியாது அணைந்து விடுகின்றன.

நீங்கள் பாடசாலையில் அவதானிக்கும் சிவப்பு நிறத்திலான தீயணைக்கும் கருவியில் அடைக்கப்பட்டுள்ள காபனீரொக்சைட் தான் தீயை அணைக்கின்றது.



ஆர்மேனியா

இந்நாட்டு மக்களை 'ஹே' என்றும் இந்நாட்டினை 'ஹயாஸ்டன்' என்றும் அழைப்பர்.

கிழக்கு ஐரோப்பாவிற்கும் தென்மேற்கு ஆசியாவிற்கும் இடையில் உள்ள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள நாடு இதுவாகும். உலகில் முதன்முதலாக கிறிஸ்தவ மதத்தை உத்தியோகபூர்வ மதமாக ஏற்றுக்கொண்ட நாடு. உரோமர், அராபியர், பாரசீகர், ஒட்டோமன் என பல்வேறு நாட்டவர்களின் ஆட்சியின் கீழ் இருந்த இந்நாட்டை 1920 இல் சோவியத் ரஷ்ய இராணுவம் கைப்பற்றியது. பின்னர், இந்நாடு 1991 இல் சுதந்திரமடைந்தது. அதனை தொடர்ந்து 1993 முதல் அசர்பைஜானுடன் மோதல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மிருகம் பறவையும்
தேசிய மிருகம் - சிங்கம்
தேசிய பறவை - கழுகு

அரசியல்
ஆர்மேனிய நாடாளுமன்றம்

ஜனாதிபதி செர்ஸ்ஜ் சர்க்ஸ்யான்

இனங்கள்
98.1% ஆர்மேனியர்
1.1% யெசிட்
0.7% ஏனையோர்

மொழிகள் ஆர்மேனிய மொழி 97.9%, குர்தி 0.1%, ஏனையவை 01%

சமயம் ஆர்மேனிய அப்போஸ்தலிக்கம் 92.6%, இவேஞ்சலிஸ் 01%, ஏனையோர் 2.4%, சமயமற்றோர் 1.1%, குறிப்பிடாதோர் 2.9%

ஆர்மேனிய இயற்கை வளம் சிறிதளவு தங்கம், செம்பு, மொலிபீடினம், துத்தநாகம், பொக்சைட்

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களையும் சிதைவுகளையும் இன்றும் இங்கு காணலாம்.

மலைத் தொடர்கள் நிறைந்துள்ளன.

தலைநகரமும் பெரிய நகரமும்

நாணயம்-ட்ரேம்

சோவியத் சமவுடமைக் குடியரசில் இருந்து சுதந்திரம் பெற்ற பொழுது விவசாயமே முக்கிய வாழ்வாதாரமாய் இருந்தது.

ஆறுகள் பல உள்ளன.

பாரம்பரிய உடை.

பாரம்பரியதோர் நடனம்.

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

துருக்கி

உணவுக்காகவும் தோலுக்காகவும் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர்
28,203 km²

மொத்த சனத்தொகை
3,056,382

வைடூரியத்தை மெருகூட்டும் கைத்தொழிலுக்கு புகழ்பெற்ற நாடு.

தங்கச் சுரங்கம்

அணுசக்தி உற்பத்தி.

ஆடை நெசவுக் கைத்தொழிலில் புகழ்பெற்ற நாடு.

இலத்திரனியல் உபகரணங்கள் உற்பத்தி.

சுற்றுலா துறைக்கென பல இடங்கள் உள்ளன.

கத்தோலிக்க தேவாலயம்.

அந்நாட்டின் பிரதான அரும்பொருட் காட்சியகம்.

பல்வேறு பான வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவையும் தன் கட்டுக்குள் கொண்டுவந்த தொலைக்காட்சி

தொலைக்காட்சி ஆரம்பமாவதற்கு முன்னரே, சினிமா அறிமுகமாகிய போதிலும் நாளடைவில் தொலைக்காட்சி அறிமுகமாகியவுடன் சினிமாவை தனது கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய அளவிற்கு தொலைக்காட்சியானது, பலம் பொருந்திய ஓர் ஊடகமாக பரிணமித்தது. சினிமாவையே தொலைக்காட்சியில் காட்டும் அளவிற்கு சினிமாத் துறைக்கும் இன்றியமையாத ஒரு பக்க பலமாக தொலைக்காட்சி மாறியது.

திரைப்படங்கள் அந்நாட்களில் 'ஃபிலிம் ரீல்' எனப்படும் படச்சுருள்களைக் கொண்டு 'புரொஜெக்டர்' எனும் கருவிமூலமே ஒளிபரப்பாகி வந்தது. இவ்வாறு ஃபிலிம் ரீலில் உள்ள திரைப்படம் எவ்வாறு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகக்கூடிய வாறு மாற்றம் பெறுகின்றது என்பது அக்காலத்தில் ஆச்சரியமான ஒரு விடயமாகவே பார்க்கப்பட்டது. எனினும், நவீன புதுப்புது கருவிகளின் வருகையே இதனை சாத்தியப்படுத்தியது. அதாவது, ஃபிலிம் ரீலில் உள்ள திரைப்படத்தை அப்படியே தொலைக்காட்சிக்கு ஏற்ற ஒளிப்பேழைக்கு (வீடியோ கெசட்) 'டிரான்சர்' செய்தல் எனும் வகையில் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு பதிவு செய்யப்பட்டே இவை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. அதுமட்டுமன்றி, திரைப்படங்களை பிரபல்யப்படுத்தும் சக்தி வாய்ந்த ஓர் ஊடகமாகவும் தொலைக்காட்சி அமைந்தது. குறித்த திரைப்படங்களை விளம்பரப்படுத்தல், சினிமா கலைஞர்களின் பேட்டிகளை ஒளிபரப்புதல், சினிமா படப்பிடிப்பு பற்றிய தகவல்களை வழங்குதல் என்ற இன்னோரன்ன விடயங்களில் திரையிடப்பட வுள்ள அல்லது திரையிடப்பட்டுள்ள திரைப்படங்கள் பற்றிய பிரபல்யப்படுத்தல்களை மேற்கொள்வதில் தொலைக்காட்சி முன்னிலை வகித்து வருகின்றது.

ஃபிலிம் ரீலை வீடியோவிற்கு மாற்றும் கருவி

சூழலும் விசித்திர உலகம்

உலக வர்த்தக மைய தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் நினைவாக அமெரிக்காவுக்கு ரஷ்ய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நினைவு

கண்ணீர்த்துளி நினைவுச் சின்னம்

தூபி இது. 100 அடி உயரம் கொண்டது. இதனை இரும்பில் செய்யப்பட்டு, வெண்கல முலாம் பூசப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தொலைக்காட்சிக்கும் தணிக்கை குழுக்கள் இருக்கின்றன. சமூகத்திற்கு ஒவ்வாத அம்சங்கள் இருப்பின் அவை மூன்று வகையில் தனிக்கை குழுவினால் கட்டுப்படுத்தப் படுகின்றது.

ஒன்று: முற்று முழுதாக தவிர்க்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாயின் அதற்கு முழுமையான தடையை விதித்தல்.

இரண்டு: ஒவ்வாத விடயங்கள் இருப்பின் அக்காட்சிகளை மாத்திரம் வெட்டி விடுதல்.

மூன்று: ஒவ்வாத காட்சிகளை திரைபோட்டு மறைத்தல் அல்லது குரல் ஒலியை தடுத்து விடுதல். இவ்வாறான வழிமுறைகளில் தணிக்கைகள் செய்யப்படுகின்றன.

(தொடரும்)

-ரீஷபன்

கொழுப்பை தண்ணீராக மாற்றும் குருவி

தன் உடலில் சேரும் கொழுப்பை தண்ணீராக மாற்றும் பறவையினத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். அவுஸ்திரேலியாவின் வனப்பகுதிகளில் வாழும் ஜீப்ரா ஃபின்ச் என்ற பறவையினமே இந்த ஆற்றலை பெற்றுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த பறவையினமானது, 12 கிராம் எடையும், 7 ஆண்டுகள் வாழ்நாளும் கொண்டதாகும். பாடும் பறவைகளான இவை ஒருநாள் முழுவதும் நீர் கிடைக்காதபோது, தமது கொழுப்பு செல்களை உடைத்து திரவமாக்கி தமது நீரிழப்பை சீர்செய்கின்றன. அத்தோடு, சரியான தட்பவெப்பம் மற்றும் ஈரப்பத சூழலில் ஜீப்ரா ஃபின்ச் பறவையின் உடலில் சராசரியாக 0.4 கிராம் நீர் உருவாகிறது.

மேற்கூறப்பட்ட தன்மையை ஆராய்வதற்காக 12 ஜீப்ரா ஃபின்ச் பறவைகளுக்கு சாப்பிட நீர் கொடுக்காது, உணவு மட்டும் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஏனைய பறவைகளோடு ஒப்பிடுகையில் ஜீப்ரா ஃபின்ச் பறவையினத்தின் உடலில் 42 சதவிகித கொழுப்பு குறைந்திருந்தது. இந்த பறவைகள் தமது உடலில் ஏற்பட்ட நீரிழப்பை சமன் செய்ய தமது கொழுப்பு செல்களைப் பயன்படுத்திக்கொண்டமை தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகில் வேறெங்கும் இல்லை..!

ஆபிரிக்கா கண்டத்தின் தென் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள ஒரு நாடுதான் மடகஸ்கர் ஆகும். உலகின் நான்காவது மிகப் பெரிய தீவாகவும் மடகஸ்கர் கருதப்படுகின்றது. உலகில் அதிகூடிய உயிர்ப்பல் வகைமை நிலவும் நாடாகவும் இது உள்ளது. இங்குள்ள உயிரினங்கள் மிகவும் தனித் தன்மை வாய்ந்தவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், மடகஸ்கரில் காணப்படும் தாவரங்கள், மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வனங்களில் சுமார் 80 சதவீதமானவற்றை, உலகில் வேறெங்கும் காண முடிவதில்லையாம்!



பால் ஒரு நிறையுணவு

உணவுப் பொருட்களில் பல நிறைந்த ஒரு நிறையுணவாகவே பால் கருதப்படுகின்றது.

பாலில் கொழுப்புச் சத்து, புரதம், காபோஹைட்ரேட், விற்றமின்கள், கல்சியம், பொட்டாசியம், சோடியம், பொஸ்பேட், மக்னீசியம் போன்ற பல சத்துக்கள் அடங்கியுள்ளன. இவை உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் பயனளிக்கக்கூடியவையாகும்.

திமில் முதுகுத் திமிங்கிலம்

திமிங்கிலங்களில் ஒரு வகைதான் 'திமில்முதுகுத் திமிங்கிலம்' (Humpback whale). இவற்றுக்கு நீண்ட துடுப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வகைத் திமிங்கிலங்கள் அதிக ஒலி எழுப்பக்கூடிய ஆற்றலை கொண்டுள்ளன. மேலும், நீரின் மேற்பரப்பில் துள்ளுதல், குட்டிக்கரணமிடுதல் போன்ற ஆற்றல்களையும் இவை பெற்றுள்ளன.

மரங்களைக் காப்போம்!

மரங்களிலிருந்து நாம் பெறும் பயன்கள் ஏராளம். ஆனாலும், மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நாளுக்கு நாள் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாகத்தான் சுவாசிக்க சுத்தமான காற்றின்மை, புவி வெப்பம் அதிகரிப்பு போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். எனினும், தற்காலத்தில் இந்த நிலை குறித்து விழிப்புணர்வு பெற்றுள்ள உலகம், மரங்களைப் பாதுகாப்பதற்காக பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

உண்மையில், ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் வளர்ந்துள்ள மரங்கள், ஓர் ஆண்டு காலப் பகுதிக்குள் அந்த நிலப்பரப்பு உட்பட, அதனை அண்டியுள்ள இடங்களிலுள்ள 13 தொன் தூசி மற்றும் பாதகமான வாயுக்களை அகற்றிவிடக் கூடியவை என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. எனவே, மரங்களை அழிப்பதை நிறுத்தி அவற்றை வளர்த்து பூமியை வளம் பெறச் செய்வோம்.

அதிகூடிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர்கள்



இன்றைய காலம்தொட்டு இன்று வரை விஞ்ஞானிகளாலும் கண்டுபிடிப்பாளர்களாலும் பல்வேறு கண்டுபிடிப்புக்கள் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. உலகில் வாழ்ந்து மறைந்த கண்டுபிடிப்பாளர்களில், அதிக கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவராக தோமஸ் அல்வா எடிசன் கருதப்படுகின்றார். இவரது கண்டுபிடிப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1093 ஆகும்.

அவ்வாறே, இன்றைய உலகில் அதிக கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவராக அவுஸ்திரேலிய கண்டுபிடிப்பாளரும் விஞ்ஞானியுமான கியா சில்வர்ப்ரூக் என்பவர் கருதப்படுகின்றார். இவர் இதுவரை 4737 கண்டுபிடிப்புகளை மேற்கொண்டுள்ளார். அவற்றில், 4665 கண்டுபிடிப்புகளுக்கு அமெரிக்க பயன்பாட்டுக் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, செப்டெம்பர் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 28, 2016.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org